# விடியல்

The Dawn

இதழ்-107, மார்ச் -2018



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**

தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**

தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
திரு. செ.தங்கராஜ்
திரு.மு.சதீஸ்குமார்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. மு.சத்தியராஜ்
முனைவர் ப.சிலம்பரசன்
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. து.சூசைபிரகாசம்
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா


## தலையங்கம்

### உலக மகளிர் தினம் - மார்ச் 8

*மங்கையராய் பிறப்பதற்கே நல்ல*
*மாதவம் செய்திடல் வேண்டுமம்மா...*

என்பது கவிமணியின் வாக்கு. உலகம் ஆண், பெண் இருவராலும் ஆக்கப்பட்டது. ஆண், பெண் சேர்ந்ததே உலகம். பெண்மைக்கு மதிப்பும் பெருமையும் வழங்கும் இடம் முன்னேற்றம் பெறும். செழிப்படையும். பெண்களின் நிலை உயரும் போதுதான் ஆண்களின் நிலை உயரும். இவ்விருவரின் நிலையும் உயரும் போது தான் மனித சமுதாயத்தின் நிலை உயரும் என காந்தியடிகள் பெண்களின் உயர்வு நிலை சமுதாயத்தின் உயர்வுக்கு காரணம் என்கிறார்.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)

**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

ஆணும் பெண்ணும் சம உரிமையுடையவர்கள் எனும் சிந்தனை தோன்றிய போது பெண்ணியம் தோன்றியது எனலாம்.

18 – ஆம் நூற்றாண்டு வரை உலக அளவில் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டும், வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். பெண்கள் வீட்டிற்கு வெளியே வரக்கூடாது என்பதற்காக கால்கள் முறிக்கப்பட்ட நிகழ்வுகளும் சீனா போன்ற நாடுகளில் அரங்கேறின. இந்நிலையில் 18 ஆம் நூற்றாண்டளவில் அமெரிக்காவில் நிலக்கரி சுரங்கம் மற்றும் தொழிற்சாலைகளில் பெண்களுக்கு பணி வாய்ப்பு வழங்கப்பட்டன. இங்கு வேலை தரப்பட்டதேயொழிய ஊதியத்தில் அநீதி இழைக்கப்பட்டது. இதனால் வருத்தமடைந்த பெண்கள் உரிமை வேண்டி குரல் எழுப்பினர். இதற்கான போராட்டத்தில் 1857 மார்ச் 8 ஆம் நாள் ஈடுபட்டனர். ஆனால் இப்போராட்டம் ஒடுக்கப்பட்டது. பின் 1910 ஆம் ஆண்டு டென்மார்க்கில் நடந்த பெண்கள் உரிமை மாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த பெண்கள் அமைப்புகளும் பங்கேற்று தம் பலத்தை உலகுக்கு உணர்த்தினர். இம்மாநாட்டில் கலந்து கொண்ட ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த **கிளாரே செர்கினே** மார்ச் 8 ஆம் தேதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தினார்.

1920 ஆம் ஆண்டு ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ் நகரில் நடைபெற்ற பெண்கள் போராட்டத்தில் ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் நாள் உலக மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என பிரகடனம் செய்தார். 1921 ஆம் ஆண்டு முதல் மார்ச் 8 உலக மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பெண்களுக்கான உரிமைப் போராட்டம் தொடங்கிய 1857 ஆம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐ.நா.

சபை பிரகடனப்படுத்தியது. தற்போதும் சில நாடுகளில் மகளிர் தினத்திற்கு விடுமுறை வழங்கப்படுகிறது.

இந்தியாவில் மகாத்மா புலே, ராம்மோகன்ராய், காந்தியடிகள் போன்றோரின் கடின முயற்சியால் பெண்களுக்கான சில உரிமைகள் கிடைத்தன. இந்தியாவில் பெண்ணியக் கருத்துக்கள் வெளிநாட்டுத் தொடர்புகள் வாயிலாக தோற்றம் கொண்டன. மகளிர் முன்னேற்றம் குறித்து ஆட்சியாளர்களும் சீர்திருத்தவாதிகளுமே வெளியிட்டனர். மேலை நாடுகளில் பகுத்தறிவு அடிப்படையிலும் இந்தியாவில் சமூக சீர்திருத்தத்தின் அடிப்படையிலும் பெண்ணியம் தோற்றம் பெற்றது. மேலை நாடுகளில் பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு அப்பெண்களே உணர்ந்து நீக்குவதற்கு போராடினர். ஆனால் இந்தியாவில் ஆண்களே முன்னின்று முயற்சியெடுத்தனர். இதற்கு காரணம் இந்தியப் பெண்களின் கல்வி அறிவின்மையும், வெளியுலகத் தொடர்பின்மையுமே காரணமாகும்.

கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்
நிலத்தில் புல் விளைந்திடலாம்
நல்ல புதல்வர்கள் விளைந்திடல் இல்லை.

என்பன போன்ற பாடல்கள் வாயிலாகப் பெண்ணிய சிந்தனைகள் தமிழகத்தில் பரவியது. தமிழகத்தில் பெண் மறுமலர்ச்சி பாரதியிடமிருந்து தொடங்கியது. பாரதியிடம் முளைவிட்ட பெண்ணியம் பாரதிதாசனில் படர்ந்து பெரியாரால் வேர்விட்டது. பின் வள்ளலார், வேதநாயகம் பிள்ளை, எனப் பலரும் பேசத் தொடங்கினர். பெண்களும் பெண்ணியம் குறித்த விழிப்புணர்வை பெற்று தம் எழுத்துகள் வாயிலாக எடுத்துரைக்கத் தொடங்கினர். இன்றைய தமிழ்ச் சூழலில் பெண்ணியம் தனியொரு இலக்கியமாக வளர்ந்துள்ளது.

பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்பதல்ல. ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான

நேர்மையான சமத்துவம் உள்ள சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் வாதம். இந்தியப் பெண்ணியம்

1. மிதவாதப் பெண்ணியம் ( Liberal Feminisim )
2. தீவிரவாதப் பெண்ணியம் ( Redical Feminisim )
3. சமதர்மப் பெண்ணியம் ( Socialist Feminisim )

எனப் பொதுவாக மூவகையாய் பிரிப்பர். பெண்களுக்கும் ஆணைப்போல் எல்லா நிலைகளிலும் சமத்துவம் வேண்டும் எனும் கருத்தை வைப்பது மிதவாதப் பெண்ணியம். எதற்கும் ஆண்களைச் சாராத நிலைத்தன்மை வேண்டுவது தீவிரவாதப் பெண்ணியம். முதலாளித்துவ மற்றும் தந்தை வழி சமூக அமைப்பே பெண்ணடிமைக்குக் காரணம் என வாதிடுவது சமதர்மப் பெண்ணியம். பெண்ணியம் என்றாலே ஆண்களை எதிர்ப்பது, குடும்பத்தை உடைப்பது என்ற தவறான கண்ணோட்டத்தை சமுதாயத்தில் ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது தீவிரவாதப் பெண்ணியமாகும்.

தற்போதைய சூழலில் பெண்ணியம் ஆண்களிடம் மட்டுமல்லாது பெண்களிடத்தும் சரியான புரிதல் உள்ளதா எனில் கேள்விக்குறியே பதிலாகக் கிடைக்கும். கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களிடத்தில் பெண்ணிய விழிப்புணர்வும், கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகள் கிடைக்காத நிலையில் அனைத்து உரிமைகள், பணி வாய்ப்புகள் போன்ற வசதிகள் கிடைத்த பெண்கள் தம் உரிமைகளை, வாய்ப்புகளை சரியான விதத்தில் பயன்படுத்திக் கொள்வதில்லை. சில பெண்கள் நாகரீகம் எனும் பெயரில் அடுத்தவர் கண்களையும், மனதையும் உறுத்தும் வகையில் செயல்படுவதும் கிடைத்த உரிமையிலிருந்து எல்லை மீறுவதும் ஏற்புடையது அல்ல.

திரைத் துறை மற்றும் விளம்பரத்துறைகளில் முற்போக்கு, நாகரீகம், பெண்ணியம் எனும் பெயர்களில் பெண்கள் போகப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றனர். இங்கு ஆடை என்பது

நுண்ணிய அரசியலாக பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தப்படுவதை பல பெண்கள் அறிவதில்லை. இது ஒருபுறமிருக்க, விளிம்பு நிலையிலிருக்கும் மகளிர் மற்றும் சிறுமியர்கள் ஆதிக்க வர்க்கத்தினரால் அல்லது முதலாளிகளால் பலவகை கொடுமைகளுக்கும் ஆளாவதை இன்றைய நாள்வரை இந்தியாவின் ஏதோ ஒரு மூலையிலும் நடப்பதை மறுக்க இயலாது. நடுத்தர வர்க்க மகளிர்களும் பணியிடங்களில் பால் அடிப்படையில் மறைமுக தாக்குதல்களுக்கு உள்ளாவதும் தொடர்கிறது. ஆக இதுபோன்ற அநீதிகளிலிருந்து மகளிர் விடுபடும் நாளே மகளிர் தினம் கொண்டாடப்படுவதின் முழுமை பெற்று அமையும். பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் இணைந்து பாடுபட்டால் ஒழிய மகளிருக்கான அநீதிகள் ஒழியாது.

பெண்ணியம் என்பது பெண்களை குடும்பத்தை விட்டு வெளியே வரத் தூண்டுகின்ற கோட்பாடு என விமர்சிக்கும் நிலையில் பெண்ணியம் பேசும் தத்துவ வாதிகள் பெண்ணியத்தை சரியான பாதையில் வழிநடத்துவது அல்லது சமூகத்திடம் சரியான புரிதலை ஏற்படுத்துவது அவசியமாகிறது. சமூகமும் பெண் என்பவள் கவர்ச்சியைத் தூண்டும் உடலமைப்பைக் கொண்டவள் என்பதைத் தாண்டி சக உயிர் என்பதை உணர்வது அடிப்படை அவசியமாகிறது. இப்புரிதல் எப்போது சமூகத்தில் நிலைநிற்கிறதோ அன்று சமத்துவ சமூகம் நிலையான வளர்ச்சியை நோக்கி பயணிக்கிறது என அறுதியிட்டு கூறமுடியும்.

**இணையாசிரியர்**

உலக மகளிர் தினம்

மகளிர் தினக் கவிதைகள்

கண் தானக் கவிதைகள்

இரத்த தானக் கவிதைகள்

பொது அறிவு வினா – விடை

பெண்ணுரிமை

# கவிதைகள்

## சாதனைச் செல்வி

என்னைப் பெற்றதால் நீ
முழுமை அடைந்தாய்
உன் வயிற்றில் பிறந்ததால்
நான் முழுமை அடைந்தேன்
என் தாயே...
நிலவாக நான் விளையாட
முகிலாக வந்தவள் நீயே
என் தாயே...
என்னை தலைநிமிர்ந்த நடை போடத்
செய்தவள் நீயே
என் தாயே...
கரும்பலகையில் இருந்த என்
கிறுக்கல்களை
ஓவியமாய் மாற்றியவள் நீயே
என் தாயே....
உன் பாதத்தை பங்கிடாமல்
எனக்கு மட்டுமே தந்தவள் நீயே
என் தாயே...

அ. ரசிகா தேவி
முதலாமாண்டு உயிர்வேதியியல்

## கண் தானம்

இருள் சூழ்ந்த கிணற்றுக்குள் இருந்து தவிக்கும்
ஒரு உயிர்
உலகின் அழகினை உணராமல்
காலத்தின் தன்மை அறியாமல்
உறவுகளின் அன்பை உள்வாங்காமல் தவிக்கிறது
அந்த உயிரின் ஏக்கம், இந்த உலகினைக் காண விரும்புகிறது
ஆகையால் நம்மால் அறியப்பட்ட உலகினை
நாம் சாய்ந்தபின் ஒளி ஏற்றும் தருணமாக
கண்தானம் செய்யுங்கள்.

தர்ஷினி.க
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல

## பெண்டிர்

எல்லா இடத்திலும் மனைவியை
கேலி செய்வது ஆண்கள் குணம்...
பெற்ற தாயிடம் கூட கணவனை
விட்டுத் தராமல் வாதாடுவது
பெண்கள் குணம்...
நீ என்னைவிட்டு பிரியும் போது கூட
வலிக்கவில்லை...

உன்னை மணம் முடிக்க இருப்பவள்
என்னை விட சந்தோஷமாக
உன்னை பார்த்துக் கொள்வாளா?
என நினைக்கும் போதுதான் வலிக்கிறது.

சு.வினிதா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## பெண்ணின் பெருமை

கலிங்கனுக்கு கரு கொடுத்த கலைமகளாய்
சிற்பிக்கு சிலை கொடுத்த சித்திரப் பெண்ணாய்
விஞ்ஞானத்தில் இடம் பிடித்த வீர மங்கையாய்
நீ படைத்த சாதனை தான் எத்தனை! எத்தனை!!
பெண்மை என்றாலே
பொறுமைக்கு பூமியாய்
பொருளுக்கு கடலாய்
கடமைக்கு நதியாய்
அழகுக்கு நிலவாய்
ஆடவருக்கு அரசியாய்
சேய்க்குத் தாயாய்
இப்படி எத்தனை எத்தனை
பண்புகளின் பாற்கடலாய் நீயடி!!
என்னவளே!
இனி
மேலும் எடுத்துரைக்க
என்னிடம் வார்த்தைகள் இல்லையடி,
நல்லவளாய்

வல்லவளாய்
நங்கை நீ திகழ்ந்திட வேண்டுமடி.....
பாரதி கண்ட
புதுமைப் பெண்ணாய்
பாரதத்தின்
பாவையாய்....
என்றும் உம்மை வணங்க வேண்டுமடி!

நா.அபிநயா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## இரத்த தானம்

உடலில் உள்ள உறுப்புகள் அனைத்திற்கும்
உயிர் தருவது இரத்தம்
அத்தகையே இரத்தத்திற்கு விலையோ அதிகம்!
விளையாட்டாய் அளிக்கும் இரத்தம்
அரியாமல் எத்தனையோ உயிரைக் காக்கும்
விலை மதிப்பில்லா இரத்தத்திற்கும்,
வியாபாரம் செய்து விற்கின்றனர் சிலர்.
ஏழை பணக்காரர் வேற்றுமையின்றி இரத்தம்
அனைத்து உடலுக்கும் உயிராய் விளங்குவது

எனவே பிறர் உயிர்பிழைத்து

என்றும் வாழ இரத்ததானம் செய்யுங்கள்

நாமும் வாழ்ந்து பிறரையும்

இவ்வுலகில் வாழவைப்பதற்கு இயன்றவரை உதவுங்கள்!

சௌந்தர்யா
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல் 'ஆ' பிரிவு

## மகளிர் தினம்

மங்கையர்க்கு சிறந்தது
   மகளிர் தினமே...
புவியில் மலர்ந்த புதுமைப் பெண்ணே
   பூவாய் மலர்ந்தவள் நீயே..
கஷ்டங்களைத் தகர்க்க
   காக்கப் பிறந்தவள் நீயே..
மழலையின் சிறப்பை உன்னுள் வைத்து
   மங்கையராகப் பிறந்தவள் நீயே..
பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய்
   பாரதம் போற்றும் அளவிற்கு திகழ்ந்தவளே..

மு.வைரமணி
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

## தாய்

அழகில்லாமல் பிறந்தால் கூட
திருஷ்டி பொட்டு வைப்பாள்
எழமுடியாமல் கிடந்தால் கூட
உடலை சுத்தம் செய்வாள்
கருசுமந்த பெண்ணெல்லாம்
கண்கண்ட தெய்வம்
என்று உணர்கிறேன் தாயே உன் அன்பாலே..

ரா.மோகனஜோதி
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.

## புதுமைப் பெண்

புவியில் பிறந்த புதுமைப் பெண்ணெ
பூவாய் மலர்ந்தவள் நீயோ....

கஷ்டங்களைத் தகர்க்க
காக்கப் பிறந்தவள் நீயே....

மழலையின் சிரிப்பை உன்னுள் வைத்து
மங்கையராய் பிறந்தாய்....

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
பாரதம் போற்றும் அளவிற்கு திகழ்ந்தாய்....

மு.வைரமணி
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

## கண் தானம்

இருண்ட உலகில் வாழும் மனிதனுக்கு
ஒளியின் மூலம் உலகை பார்க்க,
இருள் ஒன்றே வண்ணம் என்று
எண்ணி வாழும் மனிதனுக்கு
வண்ணம் பல உள்ளதென இரு
விழிகள் மூலம் காண்பதற்கும்
மண்ணில் மக்கும் கண்களை
தானம் செய்து காப்பீரே....!

பி. விக்னேஷ்
முதலாமாண்டு உயிர்வேதியியல்

## பெண்மை

பெண்ணே!
உன்னைக் கருவறையில்
சுமக்கும் போதும்
கல்லறையில் சுமக்கும் போதும்
இருந்த சுகம்
ஒன்று தான்...
குழந்தையாகப் பிறந்தும்
மகளாக வளர்ந்தும்
பருவத்திற்கு வந்து எனக்கு
பணிவிடை செய்ததும்

தான் உணர்ந்தேன்
நீ ஒருவனுக்கு மனைவி
ஆகிவிட்டாய் என்று…
குழந்தையாக இருந்த நீ
எனது இன்னொரு குழந்தைக்கு
தாயாகி விட்டாய்,
எனது கண்ணீரை துடைக்கும்
கைகளை எனக்கு எப்போதும்
தந்து கொண்டே இரு
தவறாமல்
தந்து கொண்டே இரு….

வ.பாரதி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு.

## கண் தானம்

நான் கேட்காமல் எனக்கு கிடைத்த
வரம் நீ!
இப்போது வரமாக கேட்கிறேன்
என்றும் உன்னை பிரியாத வாழ்வு
வேண்டும் என்று!
கண்களை விட கண்ணீர்க்கு
தான் மதிப்பு அதிகம்
ஏனென்றால் கண்கள் உலகத்தைக் காட்டும்
கண்ணீர் உள்ளத்தைக் காட்டும்

தானத்தில் சிறந்த தானம்
கண்தானம்.

ரா.ஜனனி
முதலாமாண்டு உயிர்வேதியியல்

## மழை

மழை வரும் பின்னே இடி
மின்னல் வரும் முன்னே
மழை வரும் என்றால் - எங்கள்
மனது துள்ளும் நன்றாய்
மழையை வேண்டும் மனிதர்
மரங்கள் தினமும் நடுவோர்
மனநாள் வாழும் நெடுநாள்.

விக்னேஷ்
முதலாமாண்டு உயிர்வேதியியல்

## பெண்ணுரிமை

காதலிக்க பெண்
வேண்டுமாம்....
கல்யாணத்திற்குப் பெண்
வேண்டுமாம்...
ஆனால் வாரிசு மட்டும்

ஆண் வேண்டுமாம்..
என்ன கொடுமை இது...

செ.கவிப்பிரியா
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

## பெண்கள்

பெண்கள் அழகாக பிறக்கனும்
என்று எதிர் பார்ப்பதை விட
பெண்மையை அழகாகப் பார்க்கும்
ஆண்கள் இருந்தாலே போதும்
ஒவ்வொரு பெண்ணும் தேவதை
தான் இந்த பூமியில்...

செ.கவிப்பிரியா
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

## பெண்கள்

பிரம்மனின் அவதாரமாக
உலகில் உதித்தவள்
அன்பின் வடிவாக மண்ணில்
வாழ்பவள் நீ
தியாகத்தின் உச்சகட்டமாக
மிளிர்பவள் இவள்
அதுதான் தாய் என்னும் உறவு
வாழ் நாளெல்லாம் வாழ்க

காலமெல்லாம் நின்புகழ் நிலைத்திருக்க
வேண்டிக் கேட்கிறேன் ஒரு வரம்
உன் கருவறையில் மீண்டும்
ஒரு அவதாரமாக பிறக்க
வானத்தில் பறக்கக் கற்றுக் கொடுத்த
உன்னை வானுலகம் போற்ற வழி செய்வேன்

ரா.மோகனஜோதி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## பெண்மை

பெ என்னும் வல்லின
எழுத்தில் தொடங்கி
மை என்னும் மெல்லின
எழுத்தில் முடியும்
ஓர் அழகான கவிதை
இது..
பெண் என்பவள்
மிகவும் மெல்லிய குணமுடையவள்
தன் உயிரை காணிக்கையாக்கி
புதிய உயிர் பூமிக்கு வர
வழிவிட்டு
மறு ஜென்மத்தையும்
எடுப்பவள் பெண்ணே..
தன் வேலைகளை முடித்து
வேதனைகளைத் துடைத்து
கலங்கரை விளக்கமாய்
நிற்பவளும் அவளே

பெண் வாழ்நாள்
முழுவதும் செருப்பாய்த் தேய்ந்து
அதில் குத்தும்
முள் என்ற தடைகளை
உடைத்து
முன்னேறுகிறாள்.

சே. ஜெயசூர்யா
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

## கண் தானம்

தானத்தில் சிறந்த தானம் கண் தானம்
கண் நாம் பார்க்கும் நிகழ்வுகளை
உள்ளடக்கி கற்பனையாக மாற்றுகிறது
நாம் இறந்த பிறகு உடல்
மண்ணில் மக்கி அழுகிப் போகிறது
அந்தக் கண்ணை மற்றவர்களுக்கு
கொடுத்தால் நம் கண்கள் மூலமாக
அவர்கள் உலகத்தைக் காண்பார்கள்
கண் மற்றவர்களை ஈர்க்கும் ஒரு
அறிய உறுப்பு!!
கண்களால் மற்றவர்களுடைய இன்ப
துன்பத்தை காண முடியும்
கண்தானம் செய்வோம்!
பிறர்க்கு வெளிச்சத்தை அளிப்போம்!

பி.ஐஸ்வர்யா
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல் ‘ஆ’

# மனித நேயம்

நாட்டில் நடக்குற அநியாயம்
அதை தடுக்க நம்மிடம் வேண்டும்
மனித நேயம்
சாப்பிடுவதற்கு வழியில்லாமல் கிடக்கும்
மனிதர்களுக்கு உதவ
ஒரு மனிதன் கூட இல்லை
உதவியை கேட்டுச் செய்வது மனித கடமை
கேட்காமல் செய்வது மனிதநேயம்.
மனிதநேயம் என்றாலே காந்தியடிகள் தான்
அந்த காந்தியடிகள் பெற்றுத் தந்த சுதந்திரத்தில்
வாழும் மக்களிடத்தில் எங்கே மனிதநேயம்
தனிமனித தத்துவமாம் இருளைப்
போக்கி சகமக்கள் ஒன்றென
உணர்வதற்கு வேண்டும்
அனைவரிடமும் அன்பு மனிதநேயம்
செலுத்துவதே மனிதநேயம் ஆகும்.

ப.குமரவேல்
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல் ‘ஆ’

## கண் தானம்

கண்கள் என்பது இந்த
அழகான உலகை ரசிப்பதற்காக,
இறைவனால் படைக்கப்பட்ட ஒன்று
சிலர் அதை சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும்
அல்லது பிறவியிலேயே தவற விடுகிறார்கள்
அதற்காக இறைவனால் வழங்கப்பட்ட
மற்றொரு வரமே கண்தானம்!
நம் இறப்பின் பின்னும் நாம்
இந்த பூமியில் வாழ மற்றொரு
வாய்ப்பு கண்தானம்!
கண் தானம் செய்வீர்!
இவ்வுலகை விட்டு நீங்காமல்...

மா.லோகேஸ்வரி
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல்

## மனித நேயம்

பெருகிவரும் மனிதவளத்தில்
குருகிவரும் மனிதவுள்ளங்களுள்
இல்லாமற் போகும் ஒன்று மனிதநேயம்...
சமுதாயம் எனும் காட்டு நிலத்தின்
அடியில் படர்ந்து இருக்கும் வேர்களே
மனிதனின் மனத்திலுள்ள மனிதநேயம் - அவ்வேர்களே

அழிந்துபோயின் அக்காடே அழியும் எனும்
மெய்யை அறிந்திலர் மனிதகுலம்... ஏனோ!

சு.ஹரிஹரன்
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல் ‘ஆ’

## மகளிர்

காற்று இல்லையேல் உயிர்கள் இல்லை
புத்தகம் இல்லையேல் மாணவன் இல்லை
ஓட்டு இல்லையேல் நல்ல தலைவன் இல்லை
ஷாஜஹான் இல்லையேல் தாஜ்மஹால் இல்லை
பெண் இல்லையேல் உலகமே இல்லை
வானவில்லின் நிறமோ ஏழு
நாக்கின் சுவையோ ஆறு
அகத்தியரின் இலக்கணமோ ஐந்து
உலகம் போற்றும் வேதமோ நான்கு
திருக்குறளின் பால்களோ மூன்று
உடம்பில் கண்களோ இரண்டு
பெண்ணின் மனம் ஒன்று தான்
தெரிந்தவன் வெற்றி யடைவான்
அறியாதவனுக்குத் தோல்வியே

பெ.பா.தர்ஷன்பாபு
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல் ‘ஆ’

## இரத்த தானம்

உடலில் உள்ள உறுப்புகள் அனைத்திற்கும்
உயிர் தருவது இரத்தம்
அத்தகையே இரத்தத்திற்கு விலையோ அதிகம்!
விளையாட்டாய் அளிக்கும் இரத்தம்
அறியாமல் எத்தனையோ உயிரைக் காக்கும்
விலை மதிப்பில்லா இரத்தத்தையும்
வியாபாரம் செய்து விற்கின்றனர் சிலர்.
ஏழை பணக்காரர் வேற்றுமையின்றி இரத்தம்
அனைத்து உடலுக்கும் உயிராய் விளங்குவது
எனவே பிறர் உயிர்பிழைத்து
என்றும் வாழ இரத்ததானம் செய்யுங்கள்
நாமும் வாழ்ந்து பிறரையும்
இவ்வுலகில் வாழவைப்பதற்கு இயன்றவரை உதவுங்கள்!

சௌந்தர்யா
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல் 'ஆ' பிரிவு

## மகளிர்

பெண்களின் இதயம் பூவை விட மிகவும்
மென்மையானது.
பெண்கள் நம் நாட்டின் கண்கள்

பெண்கள் மீன் போன்ற கண்களை
உடையவர்கள்.
பெண்களுக்கு அழகு என்பது தனது
கூந்தல்தான்.

த.ஸோபிகா
முதலாமாண்டு உயிர் தொழில்நுட்பவியல் 'ஆ' பிரிவு

## மகளிர்

அன்னையும் அவளே சகோதரியும் அவளே
தோழியும் அவளே காதலியும் அவளே
மனைவியும் அவளே மகளும் அவளே
உலகில் உள்ள அனைத்து உறவுகளும் அவள்
கொடுத்தவையே...........

**சிபிசக்கரவர்த்தி**
முதலாமாண்டு உயிர்வேதியியல

## மகளிர்

பெண்கள் இந்நாட்டின் கண்கள்
பிரிந்த உறவுகளை ஒன்றுசேர்க்கும்
தூண்கள் பெண்கள்;
இவ்வுலகில் பெண்கள் இல்லையெனில்
உலகம் சிறக்காது,
பெண்கள் மென்மையானவள், பாசமுடையவள்:

மீன் போன்ற கண்களை உடையவள் பெண்
மலரை போல மென்மையானவள் பெண்
பெண்கள் சாதனையாளர்கள்
ஆண்களுக்கு நிகரானவள் பெண்
பெண்மையைப் போற்றுவோம்
மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல
மாதவம் செய்திட வேண்டும்.

வே.ராகவி
உயிர்த்தொழில் நுட்பவியல் 'ஆ' பிரிவு

## பெண்மையைப் போற்றுவோம்

பரந்த இப்பாரினில் பேசும்
அழகு பாவை அவள்
நிறைந்த இவ்வுலகினிலே
நிலையான தேவதை அவள்
பரந்த இப்புவி வளம்பெற
இறைவன் தந்த மாவரம் அவள்
வயிற்றில் நம்மை ஏந்தியே
வலிகள் பல சுமப்பவள்
பயிற்சி ஏதும் இன்றியே
பக்குவமாய் நம்மை வளர்ப்பவள்
நம் உயிரை சுமக்கும்
தாயை
உலகைப் படைக்கும்

தெய்வத்தை
பயிரை அழிக்கும் களைபோல்
நாசம் செய்வது ஏனோ?
கயிரைக்கட்டி வீட்டிலே
கதவடைப்பது ஏனோ?
பெண்கள் அறிவில்
சிறந்தவர்களன்றோ?
வீணாய் கல்வியில் அவர்களை
விலக்கி வைப்பது நன்றோ?
விறகு உடைக்கும்
பெண்களாய் வளர்ந்துவிட்டனர்.
முடங்கிக் கிடந்த
பெண்களிடையே
முன்னேறிய பெண்கள் பலர்.
அவர்களை ஊக்கப்படுத்தாவிட்டாலும்
பரவாயில்லை
உருக்குலைக்காமல்
இருந்தாலே போதும்
மதியாவிட்டாலும்
பரவாயில்லை.
மதிப்பவரை தடுக்காமல்
இருந்தாலே போதும்
பெண்மையைப் போற்றுவோம்.

**கோ.அபிநயா**
முதலாம் ஆண்டு
உயிர்த்தொழில் நுட்பவியல் 'ஆ' பிரிவு

# மகளிர்

மகளிர் என்ற சொல்லுக்கு
பல அர்த்தங்கள் உள்ளது
பெண் என்பவள் பூவை விட
மென்மையானவள்
பூமி இயங்குகிறது என்றால் காரணம்
பெண்தான் அல்லவா?
பெண் தாய்மையடையும் பொழுது
மறுபிறவி எடுக்கிறாள்.
அவளைப் பழிச்சொல் பேசியவர்கள்
பாவப் பிறவி எடுக்கிறார்கள்.
ஆண்களின் வெற்றிக்கு பின்பு
ஒரு பெண்தான் இருக்கிறாள்
அவள் அம்மா, மனைவி தங்கை எனும்
வேறு உருவங்களில் தான் உள்ளாள்
உலகில் கடவுள் படைத்த படைப்பின் ஒரு
உன்னத படைப்பு பெண்
பெண்கள் இல்லையென்றால் இவ்வுலகம்
இயங்காது ஏனெனில் இவ்வுலகை
தங்கும் தெய்வமே ஒரு பெண் தான்.!!!

S.கீர்த்தனா
முதலாமாண்டு உயிர்தொழில்நுட்பவியல் 'ஆ' பிரிவு

## கவிதை

புலனத்தில் எழுதுவதல்ல!
புலம்பித் தீர்ப்பதல்ல!
உயிர் உள்ளம் கடல்
கடந்து பயணம்
செய்வது,
மூச்சிலும் திரிந்து
பேச்சையும் திறந்து
உணர்வில் எழுந்து
பிறப்பது!
உண்மையாய் வடிவெடுப்பது!
வரிவடிவாய் உருவெடுப்பது!
மெல்லியற்கையும் இதன்
பொருள் தான்!
பொங்கும் அகமும் இதன்
பொருள் தான்!
புரட்சி எழுப்புவதும்
இதன் களம் தான்!
ஒரு வரியோ
பல பக்கமோ!
உள்ளதைச் சொல்லி
உணர்ச்சியை ஈர்த்து
பதியவைப்பது கவிதை!

**பா.தேவி**
இளங்கலைத் தமிழ் மூன்றாண்டு

# பெண்கள்

உதிரத்தை பாலாக்கி
உயிர்தனை தினம் தந்து
குழந்தைகள் வாழ்வுக்காக
தினம் தன்னைத் தியாகம்
செய்பவள்
உலகம் வெறுத்து
ஒதுக்கினாலும்.......
உறவுகள் விட்டு
விலகினாலும்...
வறுமை வந்து வாட்டினாலும்
தன் சேயின் மகிழ்வில்
வாழும் தெய்வம் தாய்....
வாழ்நாளெல்லாம் வாழ்க
வாழும் தெய்வம்
என் தாய்தானே!
உன் கருவறையில் பிறந்து
வெளி உலகத்தைப் பார்த்து
என் சுட்டித்தனத்தை ரசித்து
வாழ்த்திய கடவுள்
என் தாய்தானே

ப.சசி
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

# பொது அறிவு வினா - விடை

1.தக்காளியின் தாயகம் எது?

விடை :அயர்லாந்து

2.குறிஞ்சி மலரில் மட்டும் எத்தனை வகைகள் உள்ளன?

விடை: 2000

3.ஆப்பிள் பழத்தின் தாயகம் எது?

விடை:கசகஸ்தான்

4.தாவரகளுக்கு உயிர் உண்டு என்று கூறியவர்?

விடை : ஜகதீஸ் சந்திர போஸ்

5.மண் இல்லாமல் தாவரங்களை வளர்க்கும் முறை எது

விடை : ஹைட்ரிபோனிக்ஸ்

6.திராட்சையின் தாயகம் எது?

விடை : ஆப்கானிஸ்தான்

7. ஐயர்லாந்து மக்களின் முக்கிய உணவு எது?

விடை : உருளைக்கிழங்கு

8.குங்குமப்பூவின் தாயகம் எது?

விடை :பாரசீகம்

9.எள்ளின் தாயகம் எது?

விடை :தென்னாப்பிரிக்கா

10.பன்றியின் கர்ப்பகாலம் எது?

விடை :16 வாரங்கள்

11.முட்டையிட்டு பால் தரும் விலங்கு எது?

விடை :பிளாட்டிபஸ்

12.யானையைப் போன்ற தந்தம் கொண்ட விலங்கு எது?

விடை :வால்ராஸ்

13. உலகின் மிகப்பெரிய பாலூட்டி எது?

விடை :திமிங்கலம்

14. உலகில் எத்தனை வகையான திமிங்கலம் உள்ளன?

விடை :100

சே.வினிதா

இளங்கலைத் தமிழ் மூன்றாண்டு

## பெண்ணுரிமை

பெண்ணுரிமை என்பது பெண்களுக்கு மிக முக்கியமாகும். பெண்கள் இன்னும் இந்த சமுதாயத்தில் அடிமைகளாக கருதப்படுகின்றனர். என்னதான் பெண்கள் ஐடி கம்பெனிகளில் பணியாற்றினாலும், விமானங்களை இயக்கினாலும் ஒரு சில பெண்களுக்கு மட்டுமே உரிமை கிடைக்கின்றனர். இன்றைய நிலையில் பெண்கள் அடிமைகளாக பல நிறுவனங்களில் கொடுமைப் படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு கல்வி என்பது மிகவும் முக்கியம். ஒரு குடும்பத்தில் அனைவருக்கும் பயன் உள்ள வகையில் அமையும். பெண்களுக்குச் சொத்துரிமை என்பது மிகவும் முக்கியம் ஆகும். பெண்கள் உடல் அளவில் பலம்பெறாவிடினும் அவர்கள் மனது அளவில் வலிமை படைத்தவர்கள் ஆவர். ஒழுக்கம் என்பது பெண்களுக்கு மட்டுமே அல்ல ஆண்களுக்கும் ஒழுக்கம் என்பது பொதுவானவை.

கே.ஆர். தனசேகர்

இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

# கவிதைகள்

## பெண்கள்

சாதனைகளோடு
சரித்திரம் படைக்க
கடவுளால் படைக்கப்பட்ட
கற்பக விருட்சம்
பெண்கள்.

மு.உமா மகேஷ்வரி
இளங்கலைத் தமிழ் முதலாம் ஆண்டு.

## அம்மா

அன்னை அடியில் தலை சாய்ந்து
தன்னந் தனிமையில் இன்று
உறங்குகிறேன் ....
அவள் முகம் பார்க்க முடியாத
நொடி பொழுதும் நான் ஏங்குகிறேன்....
தாய் பாசத்தோடு பசி ஆற்றியதால்
இந்த பல்சுவை உணவும் கசக்கிறதே....
பத்து மாதங்கள் என்னை சுமந்தவளை
பிரிந்து வந்ததை நினைத்து
உள் நெஞ்சம் தினம் வலிக்கிறதே....

பூ வாடும் போது நீரூற்று
அது அழுகும் முன்னே மருந்தூற்று
சோகம் வந்தால் அவள் தாலாட்டு
மனம் உறங்கும் தேன் குரல் கேட்டு....
பாசத்தால் என்னை கைது செய்தாள்
அதை அறியாத அவளை பிரிந்து செல்ல
பதறிப் போன நெஞ்சோடு
மகனே என்று கட்டி அனைத்தாள்....
அந்தப் பாசக் கரங்களை உதறிவிட்டு
உள்ளத்தாள் அவளை அழ வைத்ததை
நினைத்துப் பார்க்கும் போது
இதயமே இடி விழுந்து நொருங்குதே....
ஒரு நாளும் ஓய்வு இல்லாது
வயல் காட்டில் வேலை செய்து
கைரேகை தேயும் அளவிற்கு
உழைத்து அவள் என்னை வளர்த்தாள்....
ஊதக் காற்று வீசும் போது
மார்பு சூட்டால் இதம் தந்து
அனல் காற்றாலும் வாட விடாமல்
அவள் அன்பாலே என்னை நனைத்தாள்
இந்தப் பாவியோ தாய் வேண்டாமென்று
அவளைத் தள்ளி வைத்துப் போனனே
உள்ளே இருக்கும் என் உசுருக்கு
நானே கொள்ளி வைத்தேனே....

சி.சூர்யா
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.